பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

19 03 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நெதர்லாந்துடனான ராணுவ ஒத்துழைப்புகளை மேம்படுத்த இந்தியா ஆர்வமுடன் இருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.
2. ஆழ்கடல் மீன்பிடி மீனவர்களுக்கு சிறப்பு காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் கூறியுள்ளார்.
3. புதிய வருமான வரி மசோதா குறித்து வரி செலுத்துவோரிடமிருந்து ஆலோசனைகள் வரவேற்கப்படுவதாக மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.
4. உக்ரைனில் உள்ள எரிசக்தி நிலையங்கள் மற்றும் அடிப்படை கட்டமைப்பு நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் ஒப்புக் கொண்டுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

நெதர்லாந்துடனான ராணுவ ஒத்துழைப்புகளை மேம்படுத்த இந்தியா ஆர்வமுடன் இருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

புதுதில்லி வந்துள்ள நெதர்லாந்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ரூபன் **Brekelmans** -ஐ நேற்று அவர் சந்தித்து பேசினார்.

பாதுகாப்பு, தகவல் பரிமாற்றம், இந்தோ – பசிபிக் நிலவரம், புதிதாக உருவாக்கப்படும் தொழில்நுட்ப துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இரு அமைச்சர்களும் விரிவாக விவாதித்தனர்.

கப்பல் கட்டும் தொழில், விண்வெளி, திறன் மேம்பாடு போன்ற துறைகளில் கூட்டாக செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இவர்கள் ஆலோசனை நடத்தினர்.

குறிப்பாக செயற்கை நுண்ணறிவு மற்றும் அதனை சார்ந்த தொழில்நுட்பங்களில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறிததும் இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

மீனவர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கும் வகையில் ஆழ்கடல் மீன்பிடி மீனவர்களுக்கு சிறப்பு காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் கூறியுள்ளார்.

மக்களவையில் இதனைத் தெரிவித்த அவர் இந்த காப்பீட்டு திட்டத்திற்கான முழு பிரிமியம் தொகையையும் மத்திய மாநில அரசுகள் செலுத்தி வருவதாகக் கூறினார்.

இதன்படி மீனவர்கள் உயிரிழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டாலோ ஐந்து லட்சம் ரூபாயும், பகுதி ஊனமடைவோருக்கு இரண்டரை லட்சம் ரூபாயும், காயமடைவோருக்கு 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுவதாக திரு ஜார்ஜ் குரியன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் கடந்த ஏழாம் தேதி வரை55 கோடிக்கும் கூடுதலான கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்திரி, இதில் 36 கோடிக்கும் அதிகமான வங்கிக் கணக்குகள் கிராமப்புறங்களில் தொடங்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

இது தவிர வங்கிக் கணக்கு வைத்திருக்கும் 18 முதல் 70 வயது வரையிலானவர்களுக்கு பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உயிரிழப்பு அல்லது நிரந்தர ஊனத்திற்கு இரண்டு லட்சம் ரூபாயும், பகுதி ஊனத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும் வழங்கப்படுவதாகவும் திரு பங்கஜ் சௌத்திரி தெரிவீத்தார்.

[]<<<>>>[]

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விவாரதம் மாநிலங்களவையில் நேற்று நடைபெற்றது.

இந்த விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய திமுக உறுப்பினர் திரு திருச்சி சிவா, ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களின் சுகாதார தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சுகாதார திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

மருத்துவ காப்பீட்டுக்கான ஜி எஸ் டி-யை குறைக்க வேண்டுமெனவும் திரு சிவா கேட்டுக் கொண்டார்.

பிஜேபி உறுப்பினர் டாக்டர் பகவத் காரத் பேசுகையில், பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு நாட்டின் சுகாதார கட்டமைப்புகளை வலுப்படுத்தி வருவதாகக் கூறினார்.

அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால் இந்தியர்களின் சராசரி வயது தற்போது 70-ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பச்சிளம் குழந்தைகள் இறப்புவிகிதமும் வெகுவாக குறைந்திருப்பதாக திரு பகவத் காரத் தெரிவித்தார்.

காங்கிரஸ் உறுப்பினர் திரு அகிலேஷ் பிரசாத் சிங், காசநோய், டெங்கு மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை சரி செய்ய அரசு முன்னுரிமை அளிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இந்த விவாதத்தில் பங்கேற்ற ராஷ்ட்ரீய ஜனதாதள் உறுப்பினர் திரு மனோஜ் ஜா, மருத்துவ சிகிச்சைகளுக்காக தனியார் துறையை சார்ந்திருக்கும் நிலையை தவிர்க்க வேண்டும் என்று கூறினார்.

அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்றும் திரு மனோஜ் ஜா கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

வானிலை பற்றிய துல்லியமான தகவல்களை மற்றும் முன்னெச்சரிக்கைகளை சமூக ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வானிலை ஆதிகாரிகளை மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் அறிவுறுத்தியுள்ளார்.

இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளுடன ஆய்வு செய்த அவர், நாட்டின் பல்வேறு இடங்களில் டாப்ளர் ரேடார் கருவிகளை அமைக்கும் பணி குறித்தும் கேட்டறிந்தார்.

பெங்களூரு, அகமதாபாத், ராய்ப்பூர், ராஞ்சி, குவாஹாத்தி மற்றும் அந்தமானில் டாப்ளர் ரேடார் பொருத்தும் பணியை விரைவுபடுத்துமாறும் திரு ஜிதேந்திரசிங் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

சர்வதேச விண்வெளி மையத்தில் ஒன்பது மாதங்களுக்கும் மேலாக தங்கி இருந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட நான்கு விண்வெளி வீரர்கள் இன்று அதிகாலை பத்திரமாக பூமிக்கு திரும்பினர்.

இவர்களை அழைத்து வந்த ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ட்ராகன் விண்கலம், அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் உள்ள **Tallahassee** கடற்பகுதியில் வெற்றிகரமாக இறக்கப்பட்டது.

பின்னர் அந்த விண்கலம் கப்பலுக்கு கொண்டு வரப்பட்டு விண்வெளி வீரர்கள் ஒவ்வொருவராக வெளியே அழைத்துவரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து அவர்கள் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் அமெரிக்கா விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா சார்பில் கடந்த ஜூன்மாதம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எட்டு நாட்களில் இவர்கள் பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்ட நிலையில் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக பூமிக்கு திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டது.

இதையடுத்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ட்ராகன் விண்கலம் அனுப்பப்பட்டு 286 நாட்களுக்குப் பின் இன்று அதிகாலை விண்வெளி வீரர்கள் பூமிக்கு திரும்பினர்.

விண்வெளி வீரர்களை பத்திரமாக பூமிக்கு அழைத்து வந்ததற்காக ஸ்பேஸ் எக்ஸ் குழுவினருக்கு அதன் நிறுவனர் திரு எலன் மஸ்க் நன்றி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஊக்குவிக்க அதிக அளவிலான பொது தரவுகள் தேவை என மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ்

தெரிவித்துள்ளார்.,

புதுதில்லியில் நடைபெற்று வரும் ரெய்சினா பேச்சுக்களில் பங்கேற்று உரையாற்றிய அவர், தரவு ஆதாரங்கள் பல மொழிகளில் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

இதற்கென மத்திய அரசு ஏ ஐ கோஷ் எனப்படும் பொது கணினி கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகி இருப்பதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

புதிய வருமான வரி மசோதா குறித்து வரி செலுத்துவோரிடமிருந்து ஆலோசனைகள் வரவேற்கப்படுவதாக மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மசோதாவை வருமான வரித்துறையின் இணையதளத்திலிருந்து வரி செலுத்துவோர் அறிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மொழியை எளிமைப்படுத்துதல், வழக்குகள் மற்றும் இணக்க சுமைகளைக் குறைத்தல், தேவையற்ற விதிகள் மற்றும் படிவங்களை அடையாளம் காண்பது குறித்து கருத்து தெரிவிக்குமாறும் மத்திய நேரடி வரிகள் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

ரயில்வே பணி நியமன முறைகேடு தொடர்பான விசாரணைக்காக இன்று நேரில் ஆஜராகுமாறு பீகார் முன்னாள் முதலமைச்சர் திரு லாலு பிரசாத்துக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது.

திரு லாலு பிரசாத் ரயில்வே அமைச்சராக பதவி வகித்த போது பணி நியமனங்களுக்கு ஈடாக நிலம் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டின்பேரில் அவருக்கு இந்த சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் திரு லாலு பிரசாத்தின் மனைவியும், பீகார் முன்னாள் முதலமைச்சருமான திருமதி ராப்ரி தேவி மற்றும் திரு லாலுபிரசாத்தின் மகன் திரு தேஜ்பிரதாப் யாதவ் ஆகியோரிடம் பாட்னாவில் உள்ள அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று விசாரணை நடத்தினர்.

[]<<<>>>[]

உக்ரைனில் உள்ள எரிசக்தி நிலையங்கள் மற்றும் அடிப்படை கட்டமைப்பு நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் ஒப்புக் கொண்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்புடன் நேற்று நடத்திய தொலைபேசி உரையாடலின்போது 30 நாட்களுக்கு தாக்குதலை நிறுத்தி அதிபர் புட்டின் ஒப்புக் கொண்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

எனினும் உக்ரைனுக்கு எதிராக முழுமையான போர் நிறுத்தம் மேற்கொள்ள அதிபர் திரு புட்டின் மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் இந்த தற்காலிக போர் நிறுத்தத்தை உக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி வரவேற்றுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்திற்கு மாநில மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதியாக ஆயிரத்து 536 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதில் மாநில பேரிடர் நிதியின் கீழ் ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 260 கோடி ரூபாயில் இதுவரை இரண்டு தவணைகளாக தொள்ளாயிரத்து 44 கோடியே 80 லட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மேலும் தேசிய பேரிடர் நிதியிலிருந்து 276 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை கபடிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்திய அணி 89-18 என்ற புள்ளி கணக்கில் வேல்ஸ் அணியை வென்றது.

ஆடவர் பிரிவில் இந்தியா - ஸ்காட்லாந்து இடையேயான ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

***End of News***